மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

The Emerging of the Saiva Theory during the Sanga Literature

Dr. P. Suba

Assistant Professor, Department of Tamil, Sindhi College of Arts and Science, Chennai, India

Manuscript ID : **MT127A0093**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 22.10.2022
Revised: 07.11.2022
Accepted: 21.11.2022
Published: 02.12.2022

Pages : 218-227

DOI: 10.5281/zenodo.7375292

ABSTRACT:

Religious doctrine is a feature that has been interwoven in people's lives since then. The belief that God is the primary cause of good and evil in the world gave rise to the worship of God. People of the Sangam period followed the worship of minor deities, nature worship and major worship. During the Sangam period each type of area had its own deities. In this way the people of Mullai land worshiped Mayon (Tirumal), the people of Kurinji land worshiped Seyon (Murugan), the people of Marutha land worshiped Venda (Indra), and the people of Neythal land worshiped Varuna. However, there are many evidences in the Sangam literature that 'people also worshiped shiva' during the Sangam period itself.

The majority of hymns in some of the Sanga literature works such as Etuthogai and paththupattu praises Shiva and Muruga, which are the symbols of Saivism. Thirumurugatruppadai in Pathitrupathu and Kurundogai in etuthogai praise Lord Muruga. Apart from Parippadal and Natrinai (Tirumal) from the Etuthogai, all the other five books contain hymns praising Lord Shiva. In addition, it is mentioned that all the songs of God's greetings, except for Kalithogai were sung by the poet who sang Bharatam. However, doubts arise as he is said to have sung about Tirumal in Naritanai and the name of the person who sang it in the Kalithogai is not known. The aim of this article is to see how the norms of saivam have been presented.

KEYWORDS:

Sangam, God, Saivam, Lord Siva, Lands, Kurinji, Mullai, Marutham, Neithal, Veda

சங்க இலக்கியத்தின்வழி வெளிப்படும் சைவக் கோட்பாடு

முனைவர் பெ. சுபா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, சிந்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சமயக் கோட்பாடு காலம் காலமாக மக்களின் வாழ்வியலில் பின்னிப் பிணைந்துள்ள ஒரு பண்பாகும். உலகில் நிகழும் நன்மைக்கும் தீமைக்கும் முதற்காரணமாக இருப்பது தெய்வசக்தியே என்ற மக்களின் எண்ணமே தெய்வ வழிபாட்டைத் தோற்றுவித்தது. சங்க கால மக்கள் சிறு தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு என வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியுள்ளனர். சங்க காலத்தில் ஒவ்வொரு நிலத்திற்கும் தனித்தனிச்சிறப்பாக தெய்வங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வகையில் முல்லை நில மக்கள் மாயோனையும் (திருமால்), குறிஞ்சி நில மக்கள் சேயோனையும் (முருகன்), மருத நில மக்கள் வேந்தனையும் (இந்திரன்), நெய்தல் நில மக்கள் வருணனையும் வழிபட்டனர். ஆயினும் சங்க காலத்திலேயே சைவ வழிபாடும் இருந்திருக்கிறது என்பதற்குப் பல சான்றுகள் சங்க இலக்கியத்தில் காணக் கிடக்கின்றன.

சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை பத்துப்பாட்டில் பெரும்பான்மையான கடவுள் வாழ்த்துப்பாடல்கள் சைவ நெறியின் குறியீடான சிவனையும் முருகனையும் போற்றுவதாக அமைந்துள்ளன. பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படையும் எட்டுத்தொகையில் ஒன்றான குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப்பாடலும் முருகனைப் போற்றுவதாக அமைந்துள்ளன. மேலும் எட்டுத்தொகையில் பரிப்பாடல் (க.வா. இல்லை), நற்றிணை (திருமால்) நீங்கலாக மற்ற ஐந்து தொகை நூல்களிலும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப் போற்றுவதாக உள்ளன. மேலும் எட்டுத்தொகையில் கலித்தொகை நீங்கலாக அனைத்து கடவுள் வாழ்த்து பாடல்களையும் பாரதம் பாடிய பெருந்தேவனாரே பாடியதாக இடம்பெற்றுள்ளது. ஆனாலும் நற்றிணையில் இவரே திருமாலை பாடியதாகக் கூறப்படுவதிலும் கலித்தொகையில் பாடியவர் பெயர் அறியப்படவில்லை என்பதிலும் ஐயங்கள் எழுகின்றன. சைவ நெறிகள் எவ்வாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளன என்பதைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

கருச்சொற்கள்

சைவம், சமயம், சங்க இலக்கியம், இறை, சைவநெறி, ஐந்திணை

முன்னுரை

சங்க இலக்கியம் என்பது சமயக்கோட்பாடற்று இயற்கை நெறி சார்ந்தது என்றாலும் அதிலும் சமயக்கோட்பாடு பிற்காலங்களில் நுழைந்துள்ளமை நம்மால் அறியமுடிகிறது. அவ்வாறு பாடப்பட்டுள்ள பாடல்கள் வழி சங்க இலக்கியத்தின் வழி எவ்வாறு சைவநெறி வெளிப்படுத்தப்படுகிறது என்பதைப் பின்வருமாறு ஆராயப்படுகிறது.

கடவுள் வாழ்த்தும் அடிவரையறையும்

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் தொகை நூலின் அடிவரையறைக்கு ஏற்றாற் போலவே பாடப்பட்டுள்ளமை அறியமுடிகிறது.

ஐங்குறுநூறு	3-5	3	சிவன்	பாரதம் பாடிய பெருந்தேவனார்
குறுந்தொகை	4-8	6	முருகன்	பாரதம் பாடிய பெருந்தேவனார்
கலித்தொகை	11-80	17	சிவன்	புலவர் பெயர் தெரியவில்லை
நற்றிணை	9-12	7	திருமால்	பாரதம் பாடிய பெருந்தேவனார்
அகநானூறு	13-31	16	சிவன்	பாரதம் பாடிய பெருந்தேவனார்
பதிற்றுப்பத்து	8-57	12	சிவன்	பா.பா. பெருந்தேவனாராகஇருக்கலாம்
பரிப்பாடல்	32-140	-	-	-
புறநானூறு	4-40	12	சிவன்	பாரதம் பாடிய பெருந்தேவனார்

இவ்வாறு எட்டுத்தொகை நூல்களின் அடிவரையறைக்குத் தகுந்தாற்போல கடவுள்வாழ்த்துப் பாடப்பட்டுள்ளன. மேலும் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை கடவுள் வாழ்த்துப் போன்று முதலிலே பாடப்பட்டிருப்பினும் அதனைப் பத்துப்பாட்டில் ஒன்றாகவே கருதப்படுவதால் இங்கு அது எடுத்துக்கொள்ளப்படவில்லை.

முருகன்

தாமரை மலரைப் போன்ற சிவந்த அடிகளையும் பவழத்தைப் போன்ற செம்மேனியின்கண் திகழும் ஒளியினை உடையவன் என்றும் குன்றிமணியைப் போன்ற செந்நிற ஆடையினை அணிந்தவன் என்றும் கிரெஞ்சம் என்ற குன்றின் நடுஇடம் பிளக்குமாறு எறிந்த செந்நிறம் பொருந்திய ஒளிவீசும் நீண்ட வேலினை ஆயுதமாகக் கொண்டவன் என்றும் சேவல் கொடியை ஏந்தியவன் என்றும் குறுந்தொகை கடவுள் வாழ்த்துப் பாடல் எடுத்துரைக்கின்றது. அத்தகைய முருகப்பெருமான் காத்தலால் இவ்உலகம் இன்பமுள்ள வாழ்நாளைப் பெறுவதாயிற்று என்று குறுந்தொகை கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம்பாடிய பெருதேவனார் எடுத்துரைக்கின்றார். இவ்வாறு சைவக் கடவுளான முருகனைக் குறுந்தொகை கடவுள் வாழ்த்து பதிவுச் செய்துள்ளது.

சிவன்

கடவுள் வாழ்த்து பாடல்களில் எடுத்துரைப்படுகின்ற சிவனின் உருவத்தோற்றம், உலகைக் காப்பதற்காக ஏந்தி ஆயுதங்கள், அக்கடவுளின் வாகனம், கடவுளின் அற்புதங்களும் ஆடிய கூத்துக்களும் எடுத்துரைப்பட்டுள்ளன. மேலும் சிவனின் பாதியாகிய உமையாளையும் எடுத்துரைத்து அத்தகைய சிறப்பு வாய்ந்த சிவனை வணங்குதல் வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவும் சைவ நெறியின் பெருமைகளைப் பறைசாற்றுவதாகவும் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் அமைகின்றன. இதனைப் பின்வருமாறு இக்கட்டுரையில் விளக்கப்படுகிறது.

உருவத்தோற்றம்

நீலமணி போலுந் திருமிடற்றினையும் (ஐங்), நீல நிறமுடைய திருமேனியையும் (கலித்) நிறத்தால் களங்கனி தான் நிகரொவ்வாமையை ஏற்றுக்கொள்ளும் கரு நிறத்தால் கறையுற்ற திருக்கழுத்தை உடையவன் (பதிற்), மறையிசை பொருந்திய நீலமணிபோலும் திருமிடற்றனை உடையவன் (அகம்), நஞ்சினது கறுப்பு திருமிடற்றை அழகு செய்தலும் அதனையே வானோரை வாழ வைத்தமையினால் வேதத்தைப் பயிலும் அந்தணரால் புகழவும் பட்டது (புறம்) என்று சிவனின் மணிமிடற்றைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இரு தாள் நிழற்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே (ஐங்.க.வா)

எரி எள்ளு அன்ன நிறத்தன், விரி இணர்க்
கொன்றைஅம் பைந் தார் அகலத்தன், பொன்றார்
எயில் எரியூட்டிய வில்லன், பயில் இருள்
காடு அமர்ந்து ஆடிய ஆடலன், நீடிப்
புறம் புதை தாழ்ந்த சடையன், குறங்கு அறைந்து
வெண் மணி ஆர்க்கும் விழவினன், நுண்ணூல்
சிரந்தை இரட்டும் விரலன், இரண்டு உருவா
ஈர் அணி பெற்ற எழிற் தகையன், ஏரும்
இளம் பிறை சேர்ந்த நுதலன், களங்கனி
மாறு ஏற்கும் பண்பின் மறு மிடற்றன், தேறிய
சூலம் பிடித்த சுடர்ப் படைக்
காலக் கடவுட்கு உயர்கமா, வலனே! (பதிற். க.வா),

நெருப்பை இகழ்ந்தாற்போன்ற சிவந்த நிறத்தை உடையவன் (பதிற்), சிவந்த வானையொத்த திருமேனியினையும் (அகம்), வானில் விளங்கும் பிறையையொத்த வளைந்த வெள்ளிய கூரிய எயிற்றினையும் (அகம்), இளம்பிறையுடன் ஒளிரும் தலையினை உடையவன் (அகம்), பிறை போன்ற திருநுதலை உடையவன். அப்பிறையை பதினெண்கணங்களாலும் புகழப்படும் (புறம்) என்று சிவனின் உடலமைப்பு எடுத்துரைக்கப்படுகின்றது. ஒளிவிளங்கும் சடைமுடியும் பிறைச் சந்திரனைச் சூடிய நெற்றியும் முக்கண்ணும் உடைய சிவபெருமானது உருவம் போல குரால் காளைகள் விளங்கின என்பதன் வழி சிவபெருமானின் தோற்றப் பொலிவு விளங்குகிறது.

"அரும் பெறல் ஆதிரையான் அணிபெற மலர்ந்த
பெருந்தண் சண்பகம் போல்" (**கலி**.150.20-21)

என்னும் பாடலடிகள் சிவபெருமான் அழகைப் போல் மலர்ந்த சண்பக மலர்கள் என்று குறிப்பிடுகின்றன. இங்ஙனம் சங்க இலக்கியப் பாடல்கள் பல சிவபெருமானின் தோற்றப் பொலிவை சிறப்பித்துக் கூறுகின்றன.

கொலைத்தொழிலையுடைய புலியைக்கொன்று அதன் தோலை உடுத்தியவன் (கலித்), கோடுகள் விளங்கும் வலிய புலியின் தோலை உடுத்தியவன் (அகம்) என்று சிவனின் ஆடை எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிவனின் கழுத்தினையும் மேனியையும் எடுத்துரைத்து அம்மேனியில் உடுத்திய ஆடையையும் கடவுள் வாழ்த்துப் பதிவு செய்துள்ளது.

மேலும் சிவனார் சூடிய மாலைகளைப் பற்றி கூறும்போது, கொன்றைப் பூவால் செய்த மாலையைத் தோளிலே அசைய என்று கலித்தொகையும் விரிந்த பூங்கொத்துக்களையுடைய கொன்றைப் பூவால் தொடுக்கப்பட்ட பசிய மாலையணிந்த மார்பினை உடையவன் என்று பதிற்றுப்பத்தும் கார்காலத்தில் விரியும் பொன்னையொத்த கொன்றையின் புதிய மலர்களாலான தாரினை மாலையாகச் சூடியவன் என்று அகநானூறும் கார்காலத்து மலரும் நறிய கொன்றைப் பூவினை மார்பிலே மாலையாக அணிந்தவன் என்று புறநானூறும் சிவனுக்கு உகந்த மலராகக் கொன்றை மலர் இருந்துள்ளதை இச்சங்க இலக்கியம் வழி அறியமுடிகிறது.

நீண்ட முதுகின் புறத்தே வீழ்ந்து அதனை மறைத்த தாழ்ந்த சடையை உடையவன் (பதிற்), நெருப்புக்கப்பு விட்டெரிந்தால் ஒத்த விட்டு விளங்கும் முறுக்குண்ட சடை (அகம்), நீர் தொலைவறியாக் குண்டிகையானும் தாழ்ந்த

திருச்சடையினையும் உடையவன் (புறம்), பகையென்று தெளிகின்ற கங்கையின் வேகத்தைச் சடையில் ஒரு கூற்றிலே அடக்கியவன் (கலித்) என்றெல்லாம் சிவனின் சடாமுடி விதந்து பேசப்படுவதைக் காணமுடிகிறது.

மார்பிலே குற்றமற்ற நுண்ணிய பூணூலை அணிந்தவன் (அகம்), நெற்றியினிடத்து இமைக்காத கண் உடையவன் (அகம்), எட்டுக் கையினையும் உடையாய் (கலித்), கையில் ஒலிக்கின்ற பறை பல வாச்சியங்களையும் ஒலியாக நிற்க (கலித்) வெள்ளிய மணிகள் குறங்கின் (துடையின்) புடையே இயக்கப்பெற்று ஒலிக்கும் விழாவினை உடையவன் (பதிற்), நுண்ணிய நூலால் கட்டப்பட்ட துடியினை மாறியொலிக்கும் விரலை உடையவன் (பதிற்) என்று கூறுவதிலிருந்து சிவன் தன்னிடத்தே கொண்டுள்ளவற்றைத் தெளிவுபட பட்டியலிடுவதைக் காணலாம்.

ஆயுதம்

தெளிந்த ஒளியையுடைய மூவிலை வேலேந்திய ஒளிவிட்டுத்திகழும் வேறு பல படைகளையுடையவன் (பதிற்), தோல்வி இல்லாதாற்கு மூன்று தலையினையுடைய சூலப்படையும் உடையவன் (அகம்), கையினிடத்து பகைவரைக்கொன்று குந்தாலியுடன் விளங்கும் மழுப்படையும் உடையவன் (அகம்) என்று கூறுவதில் சிவனின் ஆயுதம் சிறப்பிக்கப்படுகிறது. சூலப்படையும் மழுப்படையும் கொண்டுள்ள சிவனின் வாகனமாகக் காளை குறிப்பிடப்படுகிறது. ஏறி நடாத்தியது ஆனேறு (அகம்) என்றும் வாகனமாக ஆனேறு (புறம்) என்றும் கூறுவதிலிருந்து அறியலாம்.

சிவனின் அற்புத செயல்கள்

வேதத்தை அருளியவன், முப்புரம் எரித்தல், கூளியுடன் போர், கொட்டி கூத்து, பாண்டுரங்க கூத்து, கபால கூத்து, சுடுகாடு கூத்து போன்றவை கடவுள் வாழ்த்து பாடல்களில் இடம்பெறுகின்றன. கடலால் சூழப்பெற்ற இவ்வுலகம் நடுங்க அச்சத்தைத் தரும் கடுமையான நஞ்சை உண்ட சிவபெருமான் நவிரமலையில் இருக்கும் தன்மையை,

"நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேரிசை நவிரம் மேஎய் உறையும்
காரி உண்டிக் கடவுளது இயற்கையும்" **(மலைபடு.81-83)**

என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன. அதைப் போன்று நீர், நிலம், தீ, காற்று, வான் ஆகிய ஐம்பூதங்களால் உலகை இயற்றி நெருப்பை வாளாகக் கொண்ட நெடியோனாகிய சிவன் தலைவனாக விளங்கிய தன்மையை,

“நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக” **(மதுரை.453-455)**

என்னும் பாடலடிகளில் மாங்குடி மருதனார் குறிப்பிடுகிறார்.

வேதத்தை அருளியவன்

ஆறு அங்கத்தையும் அறியும் அறவோருக்கு அரியவாகிய வேதங்கள் பலவற்றையும் அருளிச் செய்தவன் (கலித்) என்று கூறப்படுகிறது.

முப்புரம் எரித்தல்

முப்புரத்திலே தீயைச் செலுத்தி, வாக்கால் கூறப்படாமல், மனத்தால் குறித்த அப்பொருட்கும் எட்டாமல் நிற்கும் கடிதாகிய (கலித்) இறைவன் என்றும் கெடாத அவுணருடைய எயில் மூன்றும் வெந்தழியுமாறு தீக்கொளுவி அழித்த வில்லை உடையவன் (பதிற்) என்றும் முப்புரம் எரித்தல் வரலாறு சிறப்பிக்கப்படுகிறது.

கூளியுடன் போர்

கூளியினது முதுகிடாத போரினை (கலித்) சிறப்பித்து பேசப்படுகிறது.

சிவனாடிய கூத்துகள்

சிவன் ஆடிய ஆடல்களைக் கூறும்போது கொடிதாகிய கொட்டி என்னும் கூத்தை நீ ஆடுகின்ற காலத்து (கலித்) என்று குறிப்பிடுவதிலிருந்து கொடுக்கொட்டி கூத்து ஆடியதைக் குறிப்பிடப்படுகிறார். அதனைத் தொடர்ந்து போர்களில் பலவாகிய முப்புரங்களை வென்று அந்த வலியாலே அவர்கள் வெந்து வீழ்ந்த நீற்றை அணிகையினாலே பாண்டரங்கம் என்னும் பெயர்பெற்ற கூத்தை நீ ஆடுகின்ற காலத்து (கலித்) என்று பாண்டுரங்க கூத்து பதிவு செய்யப்படுகிறது. மேலும் அயன் தலையை அகங்கையிலே ஏந்துகையினாலே காபாலமென்று பெயர் பெற்ற கூத்தை நீ ஆடுங்காலத்து (கலித்) என கபால கூத்து குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு சிவன் சுடுகாட்டோடு தொடர்புபடுத்துவதைச் செறிந்த இருளில் சுடுகாட்டை விரும்பி அவ்விடத்தே நின்று ஆடிய திருக்கூத்தை உடையவன் (பதிற்) என்று கூறுவதன்வழி சிவனின் ஆடல்கள் (கூத்துகள்) பெறும் மதிப்பை அறியமுடிகிறது.

உமையோள்

சைவ கடவுள்கள் என்ற கருதப்படுகின்ற சிவன், உமையோள், முருகன் போன்றோர் ஆவர். இவர்களில் முருகனைப் பற்றியும் சிவனைப் பற்றியும் கூறிய

கடவுள் வாழ்த்து உமையாளையும் எடுத்துரைக்கின்றது. அவளே எல்லாம் அருள்பவளாக உள்ளாள் என்பதைப் பக்கம் உயர்ந்த அகன்ற குறியினையுடைய கொடியை ஒத்த இடையினையுடையோளோ தான் முடிந்துவிடும் காலத்தினைத் தன்னிடத்தே கொண்ட சீரைத் தருவாள்? ஆண்டு பிறர் இல்லையே என்றும் (கலித்) மூங்கிலினது அழகையுடைத்தாகிய அணை போன்ற மெல்லியவாகிய தோள்களையுடைய வண்டுகள் ஒலிக்கும் கூந்தலையுடையோளோ அதனிடை நிகழும் காலத்து அதனையுடைய தூக்கைத் தருவாள்? ஆண்டு பிறர் இல்லையே என்றும் குறிப்பிடப்படப்படுகிறது.

முதல் எடுக்கும் காலத்தினையுடைய பாணியைத் தருவாள்? ஆண்டுபிறரில்லையே என்றும் கூறப்படுகிறது. இது தாழிசை மூன்றனுள்ளும் நிரலே சீர் தருவாளோ எனவும் தூக்குத் தருவாளோ எனவும் கூறுவது என்பதற்கு நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

அதாவது சீர் என்பது தாளம் முடிந்துவிடும் காலம் என்றும் தூக்கு என்பது தாளம் நிகழும் காலம் என்றும் பாணி என்பது தாளந் தொடங்கும் காலம் எனவும் மிகவும் நுட்பமாக (கலித்) எடுத்துரைக்கின்றார். தூய அணிகலன்களையும் உடைய உமையம்மையாரைத் தன்னொரு பாகத்திலே உடையவனாகியவன் (ஐங்) என்றும் ஆணும் பெண்ணுமாகிய இருவகை உருவும் ஓருருவில் பெற்று அவ்விருகை உருவுக்கேற்பத் தோடும் குழையுமாகிய இருவகை அணிகளால் பொலிந்த அழகை உடையவன் (பதிற்) என்றும் ஒரு கூற்றில் உறைபவள் உமையாவள் (அகம்) என்றும் பெண்வடிவு ஒருபக்கம் உடையவன் (புறம்) என்றும் சிவனுக்கு நிகராக உமையாள் சிறப்படுவதைக் காணலாம்.

“ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர் சடை
மாற்றரும் கணிச்சி மணிமிடற் றோனும்” **(புறம்,** 1-2)

அடியும் முடியும் அறிய முடியாதவன்

மூப்பு என்றும் அடையாத தேவரும் முனிவரும் ஏனோரும் என அனைவராலும் அறியமுடியாத பழைமையாகிய தன்மையை உடையவன் (அகம்) என்று கூறுவதிலிருந்து சைவத்தின் பழமையும் அதன் நெறியையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

கார் விரி கொன்றைப் பொன் நேர் புது மலர்த்
தாரன்; மாலையன்; மலைந்த கண்ணியன்;
மார்பினஃதே மை இல் நுண் ஞாண்;

நுதலது இமையா நாட்டம்; இகல் அட்டு,
கையது கணிச்சியொடு மழுவே; மூவாய்
வேலும் உண்டு, அத் தோலாதோற்கே;
ஊர்ந்தது ஏறே; சேர்ந்தோள் உமையே
செவ் வான் அன்ன மேனி, அவ் வான்
இலங்கு பிறை அன்ன விலங்கு வால் வை எயிற்று,
எரி அகைந்தன்ன அவிர்ந்து விளங்கு புரி சடை,
முதிராத் திங்களொடு சுடரும் சென்னி,
மூவா அமரரும் முனிவரும் பிறரும்
யாவரும் அறியாத் தொல் முறை மரபின்,
வரி கிளர் வயமான் உரிவை தைஇய,
யாழ் கெழு மணி மிடற்று, அந்தணன்
தா இல் தாள் நிழல் தவிர்ந்தன்றால், உலகே. **(அகம். க.வா)**

திருமால், சிவபெருமான், நான்முகன் என்னும் மூவரும் முறையே காத்தல், அழித்தல், படைத்தல் என்னும் தொழிற்குரியவர்களாகக் குறிக்கப்படுகின்றனர்.

அகநானூற்றுத் தோழி ஒருத்தி தலைவனிடம் மாலைக்கால அழகினை,

“வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து
உருஉடன் இயைந்த தோற்றம் போல
அந்தி வானமொடு கடல்அணி கொளாஅ,
வந்த மாலை” **(அகம் 360, 6-9)**

என்கிறாள். இதில் அச்சம் தரும் மிக்க வலிமை கொண்ட இரு பெரும் தெய்வங்களான சிவன் திருமால் ஆகியோரின் செந்நிறமும் கரிய நிறமும் ஒன்று சேர்ந்த தோற்றம் போல் என்று கூறுவதன் வழி சிவபெருமான் சங்ககாலத்திலேயே பெருந்தெய்வமாக விளங்கியமை அறிய முடிகிறது

பெருந் தெய்வங்களுள் தலைமை தெய்வமாக முக்கண்ணன் சிவபெருமான் விளங்கியதை மதுரைக் காஞ்சி பின்வருமாறு கூறுகிறது.

“நீரும் நிலனும் தீயும் வளியும்
மாக விசும்போடு ஐந்து உடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவன் ஆக,
மாசு அற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப்பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின், உருகெழு பெரியோர்” **(மதுரை .453-458)**

இப்பாடல்வழி அறியமுடிகிறது.

திருவடி வணங்குதல்

முழுமுதல்வனுடைய இரண்டாகிய திருவடி நீழலின்கண் அப்பெருமானது திருவுள்ளக் குறிப்பிருந்தவற்றால் அவன், அவள், அது என்னும் மூன்று வகையாற் சுட்டப்படுகின்ற உலகங்கள் அனைத்தும் தாம் தோன்றுதற்குரிய முறைமையானே தோன்றி நிலவுவனவாயின. ஆதலால் சிவனின் திருவடிகளை வணங்கி வாழ்தல் வேண்டும் (ஐங்) என்றும் அழிதலில்லாத திருவடி நிழலில் உலகம் தங்கிற்று (அகம்) என்றும் அறவோனாகிய சிவன் என்றும் (அகம்), காலக் கடவுளாகிய இறைவனுக்கு மிக்குயர்ந்தவன் (பதிற்) என்றும் செய்தற்கரிய தவத்தையுடையோருக்கும் எவ்வகைப்பட்ட உயிர்களுக்கும் காவலாகியவன் (புறம்) என்றும் கடவுள் வாழ்த்துப் பாடல் சைவ நெறியை வலியுறுத்துகிறது. இதனை,

நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே **(ஐங்.க.வா)**

என்பதிலிருந்து அறியமுடிகிறது.

முடிவுரை

சிவனின் பல்வேறு பெருமைகளையும் முழுமையாய் அறிந்துகொள்வதற்குச் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் கடவுள் வாழ்த்துப்பாடல்களும் சங்க இலக்கிய பாடல்களும் நமக்குப் பெரிதும் துணையாக அமைகின்றன. சிவனின் அற்புதச் செயல்களின் மூலமாக சைவ நெறியைவிட உயர்ந்தது ஏதுமில்லை என்பதாகச் சங்க இலக்கியப் பாடல்களின்வழி சைவக் கோட்பாடு வெளிப்படுத்துப்பட்டுள்ளமை அறியமுடிகிறது.

துணைநூற்பட்டியல்

1. ந. சஞ்சீவி. - சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணை, பதிப்பு-2008, தமிழ்மண் அறக்கட்டளை, சென்னை.
2. சங்க இலக்கிய முழுமையும், பழைய உரை, சைவ சித்தாந்த கழக வெளியீடு, திருநெல்வேலி
3. அகநானூறு - 1968, சைவ சித்தாந்த கழக வெளியீடு, திருநெல்வேலி
4. புறநானூறு - 1967, கழக வெளியீடு
5. பதிற்றுப்பத்து - 1995, கழக வெளியீடு
6. ஐங்குறுநூறு - 1959, கழக வெளியீடு
7. பரிபாடல் - 1957, கழக வெளியீடு

8. கலித்தொகை - 1972, கழக வெளியீடு
9. நற்றிணை - 1962, கழக வெளியீடு
10. குறுந்தொகை - 2000, ஐந்தாம் பதிப்பு, உ.வே.சா., நூல்நிலையம், சென்னை

REFERENCES

1. N. Sanjeevi, Sanga Ilakkiya Aaratchi Attavanai, Edition, 2008, Thamizhman Publisher.
2. Sanga Ikakiya Full, Pazhayaurai, Saiva Siddhantha Kazhaga Veliyeedu, Thirunelveli.
3. Aganaanooru - 1968, Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli
4. Puranaanooru - 1967, Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli
5. Pathitrupaththu - 1995, Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli
6. Aingurunooru - 1959 Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli
7. Paripaadal - 1957, Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli
8. Kalithogai - 1972 Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli
9. Natrinai - 1962, Saiva Sidhdhantha Kazhaga Veliyeedu, Thirunelveli.
10. Kurunthogai - 2000, 5th Edition, Vu. Ve. Sa Noolnilayam, Chennai